



# உரிமைகளும் கடமைகளும்



நான்காம் வகுப்பு ஆசிரியை திருமதி கமலா அவர்கள் பள்ளியில் நடைபெற்ற குடியரசு தினவிழா சொற்பொழிவில் தமது மாணவர்களுக்குச்,சுதந்தர இந்தியாவில் நமது அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள் என்னென்ன, என்பதைப் பற்றி விளக்கமளிக்கத் தொடங்கினார். இந்தியா, விடுதலை பெற்ற மக்களாட்சி நாடு. இதன் அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்ட ஓர் ஆவணம் ஆகும்.



இதில் அரசாங்கத்தின் அதிகாரங்கள், பணிகள் பற்றியும், மக்களின் உரிமைகள், கடமைகள் பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள வாழ்வாதார உரிமைகளை அடிப்படை உரிமைகள் என்கிறோம்.

> உரிமைகளும் கடமைகளும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.

## அடிப்படை உரிமைகள்

நமது அரசியலமைப்பு மக்களுக்குச் சில அடிப்படை உரிமைகளை அளித்துள்ளது. அவை

- சமத்துவ உரிமை.
- சுதந்தர உரிமை.
- சமய வழிபாட்டு உரிமை.
- சுரண்டலுக்கு எதிரான உரிமை.
- பண்பாட்டு, கல்வி உரிமை.
- அரசியலமைப்பின்படி தீர்வு காணும் உரிமை.



"சமத்துவ உரிமை என்பதன் பொருள் என்ன ?"

என்று முதல் வரிசையில் அமர்ந்திருந்த லதா கேட்டாள்.

"சாதி, மத, இன, பால் வேறுபாடின்றி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே இதன் பொருள்," என்று விளக்கினார் ஆசிரியை.





"நீங்கள் சொன்ன எல்லா உரிமைகளையும் நாம் அனுபவிக்கின்றோமா ?"

என்று கேட்டான் அறிவு.





"ஆம் ! கருத்துகளைச் சுதந்திரமாகச் சொல்லும் பேச்சுரிமை, எழுத்துரிமை, சமய வழிபாட்டுரிமை, கல்வி, பண்பாட்டு உரிமை போன்ற பல உரிமைகளை நாம் அனுபவித்து வருகிறோம்.

மற்றவர்களின் உரிமைகளைப் பாதிக்காமல் நம்முடைய உரிமைகளை நாம் அனுபவிக்க வேண்டும்," என்றார் ஆசிரியை.



"தெருவோரங்களில் சிறுவர்கள் சிலர் பொருள்களை விற்பதில் ஈடுபட்டுள்ளனரே, அவர்களுக்குக் கல்வி உரிமை இல்லையா ? ஏன் ?"

எனக்கேட்டான் சங்கர்.

"பெற்றோர்கள் வறுமையின் காரணமாகத் தமது குழந்தைகளை வேலை செய்து வருமானம் ஈட்ட அனுப்புகிறார்கள். இது தவறு.

இவர்களுக்காகத்தான் நம் அரசாங்கம், சிறுவர்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களைத் தொழிற்சாலையிலோ, கடைகளிலோ பணியில் அமர்த்தக்கூடாது என்று தடை விதித்துள்ளது," என்றார் ஆசிரியை.

பெற்றோர்கள் இது போன்று குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதைத் தவிர்த்து கல்வி கற்றிட அனுப்ப வேண்டும். அதற்காக நம் அரசு 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாள் இலவசக் கட்டாயக்கல்வி உரிமைச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

இந்த அடிப்படை உரிமைகள் நமக்கு மறுக்கப்படும் பொழுதோ, மீறப்படும் பொழுதோ நாம் நீதிமன்றத்தின் உதவியை நாடலாம்.



“நாடு நமக்கு ஏராளமான நன்மைகளை வழங்கியுள்ளது; நாம் நாட்டிற்கு என்ன செய்யப்போகிறோம் ?”

என்று கேட்டான் சிவா.

“அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைக் கடமைகளைக் கடைப்பிடிப்பதே நாம் நாட்டிற்குச் செய்யும் நன்மையாகும்,”என்றார் ஆசிரியை.




“அப்படியென்றால் நம் கடமைகள் என்னென்ன ?”

என்று கேட்டாள் சரிதா.

## அடிப்படைக்கடமைகள்

- அரசியலமைப்பின் நோக்கங்களை மதித்து நடத்தல்.
- நமது நாட்டின் தேசியக்கொடியையும், தேசியகீதத்தையும் மதித்துப் போற்றுதல்.
- அமைதிவழியில் தீர்வு காணுதல், சமயச்சார்பின்மையைப் பின்பற்றுதல்.
- நமது நாட்டின் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல்.
- தேசத்தின் இறையாண்மை, ஒற்றுமை, ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல்.
- பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.
- நம் நாட்டின் பாதுகாப்பிற்காகப் பாடுபடுதல்.
- இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்.
- மூடப்பழக்கவழக்கத்தைத் தவிர்த்துக் கல்வி கற்றலின் மூலம் நம்மையும், நாட்டையும் உயர்த்திக்கொள்ளுதல்.
- அவரவர் துறைகளில் உயரப் பாடுபடுதல்.
- பெற்றோர் அல்லது காப்பாளர் தங்கள் குழந்தைகளைக் கட்டாயம் பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.




“உரிமைகளும் கடமைகளும் பற்றி அறிந்து கொண்ட நாம் அதனைப் பின்பற்றி செயல்பட வேண்டும்,” என முடித்தார் ஆசிரியை.

## மதிப்பீடு

### I. கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையில் உனக்குப் பிடித்த உரிமைகளையும், கடமைகளையும் ✔ செய்க

| உனது உரிமைகள் குடும்பத்தினரிடமிருந்து நீ எதிர்பார்ப்பது | உனது கடமைகள் குடும்பத்தினர்உன்னிடம் எதிர்பார்ப்பது |
|---|---|
| அன்பு | வேலைகளைப் பகிர்ந்து செய்தல் |
| மதிப்பு | மரியாதையுடன் பேசுதல் |
| மகிழ்ச்சி | மற்றவர்களின் மனதைப் புண்படுத்தாமல் மகிழ்வித்தல் |
| படிப்பு | கவனமுடன் படித்தல் |



### II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. சட்டத்தின் முன் அனைவரும் ____________________ .
2. கருத்துகளைச் சுதந்தரமாகச் சொல்லுதல் ____________ உரிமை.
3. நாமும் நாடும் வளம்பெற நாம் _______________ செய்ய வேண்டும்.



### III. சிறுவினா

1. அடிப்படை உரிமைகள் என்றால் என்ன ?
2. அடிப்படை உரிமைகள் நான்கினை எழுது.
3. அடிப்படைக் கடமைகள் ஐந்தினைக் கூறு ?



### IV. செயல்பாடு

உனது வகுப்பறை நல்ல முறையில் நடப்பதற்குத் தேவையான விதிகளை மாணவர்களைக் கொண்டு எழுதச் செய்க. பின்னர் அவ்விதிகளை வாக்கெடுப்பின் மூலம் எத்தனை மாணவர்கள் விரும்புகிறார்கள் என்பதை அறிந்து கொள்க. பெரும்பான்மையான மாணவர்கள் விரும்பிய விதிகளை ஓர் அட்டையில் எழுதச் செய்து தொங்க விடவும்.



# ஒவ்வொருவரின் வாழ்விலும்

மக்களின் வாழ்க்கை முறை என்பது அவர்கள் வாழுமிடம், செய்யும் தொழில்,



வருமானம், பொழுதுபோக்கு, கலாசாரம், பண்பாடு மற்றும் நீதிமுறை போன்றவைகளைச் சார்ந்துள்ளது. இந்தியாவில் உள்ள நகரங்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு மாநிலத்தைச் சார்ந்த மக்கள் ஒன்றிணைந்து வாழ்கிறார்கள். இவர்கள் தாங்கள் இருக்கும் இடத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் ஏற்றுக் கொண்டு அங்குள்ள மக்களுடன் இணைந்து வேற்றுமையிலும் ஒற்றுமையைக் கண்டு அமைதியாக வாழ்கின்றனர்.

வெவ்வேறு சூழ்நிலையில் வசிக்கும் மக்கள், தங்கள் தேவைக்கேற்ப வாழ்க்கை முறையை எவ்வாறு அமைத்துக்கொள்கிறார்கள் என்பதை அவர்கள் கூறுவதைக் கேட்டு அறிந்து கொள்வோம்.

### வாசமல்லி – தோடர் இனத்துப்பெண்

என் பெயர் வாசமல்லி, எனக்கு 9 வயது ஆகிறது. நான் நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம் நகருக்கு அருகில் உள்ள கோடப் மந்துவில் வசிக்கிறேன். எங்களை மாதிரி பல குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து இருக்கும் இடத்தை மந்துன்னு சொல்வாங்க. நான் தோடர் மலை வாழ் இனத்தைச் சேர்ந்தவள். என் தந்தை கொரட்டாஸ் தேயிலைத் தோட்டத் தொழிலாளி. என் தாய் புதுமல்லிஸின் இங்குள்ள ஒரு பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிகிறார். நான் அப்பள்ளியில் நான்காம் வகுப்புப் படிக்கிறேன்.

நாங்கள் பள்ளிக்கு நடந்துதான் செல்வோம். நான் காலையில் எழுந்து அம்மாவிற்கு வீட்டு வேலையில் உதவி செய்வேன். மாலையில் பள்ளியிலிருந்து வந்ததும் அதிக நேரம் விளையாட முடியாது. ஏனென்றால் இது மலைப் பகுதி அதனால் சீக்கிரமே குளிர ஆரம்பித்து விடும்.



வாசமல்லி

ஓய்வு நேரங்களில் என் அம்மா, தன் சிறுவயது பற்றிக் கூறுவார். அவர்கள் வாழ்ந்த காலம் கல்வியின் முக்கியத்துவம் தெரியாத காலம். அக்காலத்தில் சிறுவயதுத் திருமணம்வழக்கத்தில் இருந்தது. அதனை எதிர்த்து, ஒரு பெண் படிப்பைத் தொடர்ந்தது எவ்வளவு போராட்டமாக இருந்தது என்பதை அடிக்கடிக் கூறுவார். என் பாட்டனார் எருமை மாடுகள் வளர்த்தாராம். அவருடைய இலட்சியம் தன்னிடமுள்ள எருமைகளின் எண்ணிக்கையைப் பெருக்கி ஒரு மந்தை ஆக்குவதாம். இதனை என் தாய் கூறிய பொழுது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அப்பொழுதெல்லாம் யாரிடம் அதிக எருமைகள் உள்ளதோ அவரையே பெரிய செல்வந்தராக நினைப்பார்களாம். அதோடு அவருக்கு எங்கள் கூட்டத்தினரிடையே மிகுந்த செல்வாக்கு இருக்குமாம்.



இப்பொழுது எங்கள் இனத்து மக்களுக்கும் மற்ற இனத்தவர்களுக்கும் இடையே தொடர்பு அதிகரித்துள்ளது. இதனால் பழைய பழக்க வழக்கங்கள் மாறிக்கொண்டு வருகின்றன. எங்களில் பலரும் முன்புபோல் மூங்கில், காய்ந்த புற்களால் கூரையிடப்பட்ட தாழ்ந்த வாசலுடன் கூடிய குடிசை வீடுகளில் வாழ்வதில்லை. எல்லோரையும் போல் கல் வீடுகளில் தான் வாழ்கிறோம்.

நாங்கள் ஒரு வெள்ளைத் துணியை இடுப்பைச் சுற்றியும் மற்றொன்றைத் தோளைச்சுற்றியும் அணிவோம். (தோளைச் சுற்றி அணியும் அங்கி, கறுப்பு, சிவப்பு நூற்களால் பூவேலை செய்யப்பட்டிருக்கும்) இவ்வாடைகளைக் கோனஸாஸ்த்ரா என்ற தெய்வ வழிபாட்டின் பொழுதும், திருமணம் போன்ற மகிழ்வான நாட்களில் மட்டுமே அணிகிறோம். என் பாட்டி தலையில் வெண்ணெயைத்தடவிச் சுருட்டிக் கொள்வார். தற்போது நாங்கள் தலையைச் சீவி பின்னல் இட்டுக்கொள்கிறோம்.



எங்கள் முன்னோர்களின் முதன்மைத் தொழில் மாடுகளை மேய்த்தல். அதனால், காய்கறி, பழங்களுடன் பாலையும், பாலிலிருந்து கிடைக்கும் பொருள்களையும் உணவில் பெரிதும் சேர்த்துக்கொண்டனர். இப்பொழுது ஏற்பட்டுள்ள வெளி உலகத்தொடர்பால் எங்கள் உணவுப்பழக்கங்கள் மாறிவிட்டன.

எங்கள் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் பல நிகழ்ந்த போதிலும், எங்களின் சில பாரம்பரிய பழக்கவழக்கங்களை இன்றும் பின்பற்றி வருகிறோம். உதாரணமாக நாங்கள் இன்றும் எங்களின் பாரம்பரியக் கோயிலான "தீக்ரிஷி" க்குச் சென்று வருகிறோம். பிறப்பின் போதும், இறப்பின் போதும் சில முக்கியச் சடங்குகளைப் பின்பற்றி வருகிறோம். இப்போது எங்கள் இனத்தைச் சார்ந்த பலர் கல்வி கற்று முன்னேறி வருகின்றனர்.

## தஞ்சாவூரில் ஒரு விவசாயி



என் பெயர் மணி. நான் பிறந்தது வளர்ந்தது எல்லாமே தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆலத்தூரில் தான். வளமிக்க வண்டல் மண்ணும், இதமான சூரிய ஒளியும், காவிரி ஆறும் தஞ்சை மாவட்டத்தை ஒரு விவசாய பூமியாக வைத்திருக்கிறது. நெல் இங்கு முக்கியமான பயிராகும். தஞ்சாவூரைத் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்று கூறுவார்கள்.

நான் சிறுவனாக இருந்தபோது எங்கள் ஊருக்குச் சரியான போக்குவரத்து வசதி கிடையாது. அதனாலேயே என்னால் கல்லூரி சென்று என் கல்வியைத் தொடர முடியவில்லை.



என் தந்தைக்கு உதவியாக நிலத்திற்குச் செல்ல ஆரம்பித்தேன். அந்தக் காலத்தில் எங்கள் நிலம் வடகிழக்குப் பருவமழையை நம்பித்தான் இருந்தது. இரவு பகல் பாராமல் எங்கள் நிலத்தில் உழைத்தோம். போதுமான போக்குவரத்து வசதி இல்லாததால் விளைவித்த பயிரை மாட்டுவண்டியில் ஏற்றிக்கொண்டு முதல் நாள் இரவே புறப்பட்டுச் சரியான நேரத்தில் சந்தைக்குச் செல்வோம்.

இப்பொழுது, எங்கள் கிராமத்திற்கும் பள்ளி வசதி, போக்குவரத்து வசதி; மின்சார வசதி, போன்ற அனைத்து வசதிகளும் கிடைத்துள்ளன. நல்ல அறுவடைக் காலங்களில், நகர வாசிகளுக்கு நிகராக எங்கள் வாழ்க்கையும் உற்சாகமாக இருக்கிறது. ஆனாலும் சில சமயங்களில் காலம் தவறிய மழை, வெள்ளப்பெருக்கு, புயல் போன்றவை எங்களைத் திக்கு முக்காடச் செய்து விடுகின்றன.



நமது அரசு பல வகைகளில் எங்களுக்கு உதவுகின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியும் சமூக நலக்கூடங்களும் அமைத்துள்ளது. வானொலி, தொலைக்காட்சி மூலமும், தேர்ச்சி பெற்ற அரசு ஊழியர்கள் மூலமாகவும் அவ்வப்பொழுது ஏற்படும் வளர்ச்சி, மாற்றங்களைத் தெரியப்படுத்துகிறது. சிறு விவசாயிகளுக்கென்று கூட்டுறவு அங்காடி, வங்கி, சங்கம் அமைத்து எங்களுக்கு முறையாக உதவிவருகிறது.


என்னுடைய ஓய்வு நேரத்தில் மகசூலைப் பெருக்க புதிய உத்திகளைச் சோதனை செய்கிறேன். தற்சமயம் மண்புழு வளர்ப்பு, இயற்கை உரம் தயாரித்தல் போன்றவற்றைச் சோதனை முறையில் செய்து வருகிறேன். ஒரு விவசாயியாக என் வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் நிறைவாகவும் இருக்கிறது.

## இடம் பெயர்ந்த கூலி

என் பெயர் இரண்பீர், எனக்கு 30 வயதாகிறது. நான் மும்பையில் உள்ள புறநகர்ப் பகுதியான காண்டிவாலி என்ற இடத்தைச் சேர்ந்தவன். என் பெற்றோர்கள் அங்குள்ள ஒரு கல்குவாரியில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு நானும் அங்கேயே வேலை பார்க்க வேண்டும் என்று ஆசை. ஆனால் எனக்கு அதில் சிறிதும் விருப்பம் இல்லை. நான் 8 ஆம் வகுப்பு வரை படித்தேன். தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு வேலை தேடிப் பிழைத்துக் கொள்ளலாம் என்று வந்துவிட்டேன். ஆனால் எதிர்பாராத விதமாக இரயில் நிலையத்தில் கூலியாள் ஆனேன்.



வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு எங்கள் வாழ்க்கை எளிதாகத் தெரியும். ஆனால் உண்மையில் இது ஒரு போராட்டமான வாழ்க்கை. எங்கள் வேலையைப் பற்றிச் சொன்னால்தான் உங்களுக்குப் புரியும். அனுமதி முறையில் எண்கள் கொடுக்கப்படும். எங்கள் முறைக்காக நாங்கள் 2 அல்லது 3 மணி நேரத்திற்குக் காத்திருக்க வேண்டும். எங்களுக்கென்று சில வரைமுறைகள் இருந்தாலும், அவ்வப்பொழுது எங்களுக்குள் தகராறுகள் வருவதும் உண்டு. அவற்றையெல்லாம் தாண்டித்தான் தொழில் செய்ய வேண்டியுள்ளது.





ஒரு நாளில் 10 அல்லது 12 மணி நேரம் வேலை செய்வேன். பயணிகளிடம் 50 முதல் 300 ரூபாய் வரை கூலி கேட்பேன். அது நான் சுமக்க வேண்டிய பொருட்களின் எண்ணிக்கை மற்றும் அதன் பளுவைப் பொருத்தது. ஒரு நாளில் சுமார் 200 ரூபாய் கிடைக்கும். என் குடும்பத்தில் 4 நபர்கள் உள்ளனர். இன்றைய விலைவாசி ஏற்றத்தில் குடும்பத்தை நடத்துவது கடினமாகத்தான் இருக்கிறது. இருப்பினும் சிக்கனமாகவும் தேவையற்றதைத் தவிர்த்தும் வாழ்கிறோம். குழந்தைகளின் தேவையை முடிந்தவரைப் பூர்த்தி செய்வேன்.

என்னுடைய இத்தனை வருடக் கூலி வாழ்க்கையில் எனக்கு மகிழ்ச்சியைத் தருவது என்ன தெரியுமா? நான் பேசக் கற்றுக்கொண்ட தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி போன்ற மொழிகள் தான். நான் தற்போது கார் ஓட்டுவதற்குப் பயிற்சி எடுத்து வருகிறேன்.

## சாலை ஓரத் துரித உணவுக் கடைக்காரர்



என் பெயர் சந்தோஷ். எனக்கு 25 வயது ஆகிறது. நான் திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்தேன். என் தந்தை அங்கிருக்கும் ஒரு துணிக்கடையில் வேலை செய்கிறார். நான் 10 ஆம் வகுப்புவரை படித்திருக்கிறேன். ஒரு நாள் திடீரென்று சென்னைக்கு ரயில் ஏறி வந்து விட்டேன்.

இங்கு வந்த புதியதில் எனக்கு எல்லாம் புதுமையாக இருந்தது. சாலை நிரம்பிய வாகனங்கள்! பெரிய பெரிய கட்டடங்கள்! எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம்! என என்னைத் திக்குமுக்காடச் செய்தன.

ஒரு நாள் சாலை ஓரமிருந்த ஓர் உணவகத்தில் உணவருந்தி விட்டு அருகிலிருந்த ஒரு கல்லின் மேல் உட்கார்ந்திருந்தேன். அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் இருந்தேன். என்னை, அந்த உணவக உரிமையாளர் அழைத்து விசாரித்தார். நானும் என் கதையைச் சொன்னேன். பிறகு, அவர் என்னை “என் கடையில் வேலை செய்ய விருப்பமா?” என்று கேட்டார். நானும் தலையசைத்து வேலையில் சேர்ந்தேன். எனக்கு உண்ண உணவும், இருக்க இடமும் கொடுத்தார். மாத முடிவில் ஒரு தொகையைச் சம்பளமாகவும் கொடுத்தார். முதலில் அவருக்கு உதவியாகப் பாத்திரங்களைக் கழுவினேன். கடையைத் தூய்மை செய்தேன்.

சில சமயங்களில் அவர் உணவு தயாரிக்கும்போது உதவியும் செய்தேன். 3 வருடம் அவருடன் இருந்து வேலைகளைக் கற்றுக் கொண்டேன். பிறகு ஒரு நாள் சொந்தமாக ஒரு துரித உணவகம் வைக்கும் எனது ஆசையை அவரிடம் கூறினேன். அவரும் மகிழ்ச்சியுடன் நான் கடை வைக்க உதவி செய்தார். ஆரம்ப நாட்களில் உணவுப் பண்டங்களைத் தயாரித்துக் கொண்டு மாலை 5 மணிக்கெல்லாம் கடற்கரையை ஒட்டிய ஒரு சாலைக்கு வந்து விடுவேன். வெகு சில நாட்களிலேயே என் வியாபாரம் விறுவிறுப்பானது.



சமீப காலங்களில் மக்களின் மனப்பான்மை வெகுவாக மாறி விட்டது. முன்பெல்லாம் சாலை ஓரக்கடைகளில் உணவருந்த பெரும்பாலான மக்கள் தயங்கினார்கள். இப்பொழுதெல்லாம் நான் தயாரித்து வரும் பண்டங்கள் அனைத்தும் விரைவில் விற்பனை ஆகி விடுகிறது. புதிது புதிதாக உணவுப் பண்டங்களைத் தயாரிக்கக் கற்றுக்கொண்டேன். எங்கள் திருநெல்வேலிக்கே உரிய சில பண்டங்களையும் தயாரிக்கிறேன். மக்களும் விரும்பி வாங்குகிறார்கள்.

இப்பொழுதெல்லாம் மக்கள் கடுமையாக உழைக்கிறார்கள். நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள். ஆரோக்கியமான, தூய்மையான உணவுகளையே விரும்புகிறார்கள். நான் அவர்கள் எதிர்பார்ப்புக்கேற்ப என் தொழிலைச் செய்து வருகிறேன்.



சாலையோரத்திலுள்ள என் உணவகத்திற்குப் பலதரப்பட்ட மனிதர்களும் குடும்பத்துடன் வருகிறார்கள். மாலைப் பொழுதை மகிழ்ச்சியாகக் கழிக்கிறார்கள். ஓய்வாக வந்து என் கடையில் உணவருந்துகிறார்கள். எனக்குத் தேவையான வருவாய் இப்பொழுது கிடைக்கிறது.

என் ஓய்வு நேரங்களில், திருநெல்வேலியின் பசுமையான வயல்களும், அதிகாலையின் மென்மையான குளிர்க்காற்றும் தாமிரபரணி ஆற்றங்கரையும், என் தாயின் அன்பான அழைப்பும் என் கண்முன் தோன்றி மறையும்.



## I.செயல்பாடுகள்

1. கோத்தர்கள், படகர்கள், பணியர்கள், குறும்பர்கள் போன்ற பழங்குடியினரைப் பற்றி ஆசிரியரிடம் கேட்டு அறிந்து கொள்க.
2. உன் ஊரில் உள்ள தொழிலாளர்கள் சிலரின் வாழ்க்கை முறையைக் கேட்டறிந்து வரவும்.

## II. குழுவாகச் செய்யவும்

வகுப்பை நான்கு குழுக்களாகப் பிரிக்கவும். கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை ஒவ்வொரு குழுவிற்கும் கொடுத்து கலந்துரையாடச் செய்யவும்.

(அ) நீலகிரி மாவட்டத்தில் விவசாயம்

(ஆ) விவசாயத்தில் தற்போது உபயோகப்படுத்தப்படும் புதிய முறைகளால் நன்மையா ? தீமையா ?

(இ) துரித உணவின் நன்மை தீமைகள்


(ஈ) கூலிகளின் வாழ்வை வளமாக்க உங்கள் அறிவுரை

## III. வகைபடுத்துக

மந்து, நூடுல்ஸ், சுமை, உழவு, எருமை, விவசாயநிலம், துரிதஉணவு, கோனஸாஸ்த்ரா, நெற்களஞ்சியம், இயற்கை உரம், இரயில் நிலையம்.

| தோடர்கள் | உழவர் | இடம்பெயர்ந்த கூலி | துரிதஉணவு கடைக்காரர் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

## மதிப்பீடு



### I.கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தோடர்களின் பாரம்பரிய கோயில்_______________.
2. நீலகிரி மாவட்டத்தின் தலைநகர் _______________.
3. மணி, தன் நிலத்தில் ___________ மற்றும் ____________பயிரிடுகிறார்.
4. இரண்பீர் அறிந்த பிற மொழிகள் ____________, _______________.
5. திருநெல்வேலி _____________ நதிக்கரையில் அமைந்துள்ளது.

### II. வினாக்களுக்கு விடையளி



1. வாசமல்லியை வியப்படைய வைத்த செய்தி எது ?
2. தஞ்சைக்கு அதிக மழை தரும் காற்று எது ?
3. ஒரு நாளில் எவ்வளவு நேரம் இரண்பீர் உழைக்கிறார். ?
4. தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் எது ? ஏன் ?







# 5 கண்டுபிடிப்புகள்

மாலை நேரம். பள்ளியில் நடைபெறவிருக்கும் சமூக அறிவியல் கண்காட்சி பற்றி ஆசிரியர் மாணவர்களிடம் கலந்துரையாடத் தொடங்கினார். மனிதனின் தேவைகளே கண்டுபிடிப்புகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. சரிதானே ? என்றார் ஆசிரியர்.


“ஆம்,” என்றாள் மல்லி. “நான் கூட விளையாடுவதற்கு சிறிய அட்டை வீடு செய்துள்ளேன். எங்குச் சென்றாலும் எடுத்துச் செல்வேன்” என்றாள்.

“அப்படியா ? உனக்கு எப்படி இந்த யோசனை தோன்றியது ?” என்றான் மணி.

“நத்தையிடம் இருந்து தான்,” என்றாள் மல்லி.



நீ வேடிக்கையாக செய்த பொருள்கள் சிலவற்றைக் கூறு.



கண்டுபிடிப்புகள் அனைத்துமே இயற்கையிலிருந்தே பெறப்பட்டவை ஆகும்.

நாம் கணினிகள் நிறைந்த அறிவியல் உலகில் வாழ்கிறோம். புதிய கண்டுபிடிப்புகள் நம் அன்றாட வாழ்க்கையை எளிதாக்கி வருகின்றன. நாளுக்கு நாள் புதிய கண்டுபிடிப்புகள் வந்து கொண்டே இருக்கின்றன.

## உங்களுக்குத் தெரியுமா ?

நெருப்பு, ஏர், சக்கரம் போன்றவை முக்கிய கண்டுபிடிப்புகள் ஆகும். இவை மனித நாகரிக வளர்ச்சியால் கிடைத்த பயன்மிக்கக் கண்டுபிடிப்புகளாகும். “கண்டுபிடிப்புகள் மனிதர்களின் அனுபவங்களின் தொகுப்பால் விளைந்தவை,” என்றார் ஆசிரியர்.

“எப்படி ?” என்றான் மணி.


“பறவைகள் பறப்பதைக் கண்டு விமானத்தை வடிவமைத்தனர்,” என்றார் ஆசிரியர்.

## நெருப்பு



நாம் முதலில் நெருப்பைக் கண்டறிந்த கதையை அறிவோமா ?

### நெருப்பை உண்டாக்கியக் கதை



"ஆதிமனிதன் காட்டில் சுற்றித் திரியும் பொழுது மூங்கில்கள் ஒன்றோடொன்று உரசி அதிலிருந்து தீப்பொறி உண்டாவதைக் கண்டான். அந்தப் பொறியினால் இலைச்சருகுகள் குச்சிகள் தீப்பிடித்து எரிவதைக்கண்டான். பயந்து ஓடினான். தீ அணைந்த பின்பு அத்தீயில் வெந்து கிடந்த விலங்குகளின் மாமிசத்தைச் சுவைத்துப் பார்த்தான். பிறகு சிக்கி முக்கி எனப்படும், ஒரு வகைக்கற்கள் ஒன்றோடு ஒன்று உரசும் பொழுது தீப்பொறி உண்டாவதைக் கண்டுகொண்டான்.


வேட்டையாடிய விலங்குகளை வேகவைக்கவும், இரவில் ஒளி பெறுவதற்கும்,குளிர் காய்வதற்கும், மேலும் கொடிய விலங்குகளை அஞ்ச வைத்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் நெருப்பைப் பயன்படுத்தினான். இது அவன் கண்டுபிடித்த மிக முக்கிய கண்டுபிடிப்பாகும். மனித குலத்தின் முன்னேற்றத்தில் இது ஒரு மைல் கல் எனலாம்," என்று கூறி முடித்தார் ஆசிரியர்.

## ஏர்


"நாம் அடுத்து என்ன கண்டுபிடிப்பைப் பற்றி அறியப் போகிறோம்?" என்றாள் திவ்யா. "ஏரைப் பற்றித் தானே," என்றான் பவன். "விவசாய நிலத்தை உழுது பயிர் செய்ய மனிதன் சுமார் **8000** ஆண்டுகளுக்கு முன்னரே வடிவமைத்த கருவி **ஏர்.** இது கலப்பை என்றும் அழைக்கப்படுகிறது. நிலத்தை உழுது, பண்படுத்தி விதைக்க ஏற்றதாய் ஆக்கித்தருவதில் ஏர்க்கலப்பையின் பங்கு முதன்மையானதாகும்.

### ஏர் உருவான கதை

நிலத்தைக் கிளறுவதற்கு முதலில் கூர்மையான கற்களை, விலங்குகளின் எலும்புகளைப் பயன்படுத்தினான். பின்னர் மரங்களிலிருந்து கிடைத்த வளைந்த அமைப்புடைய கூர்மையான மரக்கட்டையை உழுவதற்குப் பயன்படுத்தினான். நாளடைவில் நாய், குதிரை, மாடு, கழுதை போன்ற விலங்குகளைப் பூட்டி இக்கலப்பையைப் பயன்படுத்தினான். உழவு செய்வது சுலபமாக இருந்ததை உணர்ந்தான்.



மனிதனால் வடிவமைக்கப்பட்ட முதல் விவசாயக் கருவி ஏர் ஆகும். இரும்பைக் கண்டறிந்த பிறகு மரக்கட்டையுடன் இரும்பைப் பொருத்தி நிலத்தை ஆழமாகவும் விரைவாகவும் உழவுசெய்யக் கற்றுக் கொண்டான்.



இந்த எளிய கருவியே கலப்பை எனலாம். கலப்பை உணவு உற்பத்தியை துவக்க உதவியது. தற்போது நவீன கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயம் பெருகி வளர்ந்து தன்னிறைவை அடைந்து வருகிறோம்,'' என்று ஆசிரியர் ஏர் உருவான கதையைக் கூறி முடித்தார்.

## உனக்குத் தெரியுமா!


முதல் ஏர் நமது தமிழ்நாட்டில் தான் உபயோகத்தில் இருந்தது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனை நன்கோள் என்று கூறுவர். நன் –எருது, கோள் – அதனை இயக்குபவர் என்ற பொருள்படும்.



''மனிதனின் மற்றொரு கண்டுபிடிப்பான சக்கரத்தைப் பற்றிக் கூறுங்களேன்,'' என்றாள் ஜனனி.

## சக்கரம் உருவான கதை



''ஆதி மனிதர் தாம் வேட்டையாடிய விலங்குகளை, அங்கிருந்து தாம் வாழுமிடங்களுக்கு எடுத்துச் செல்ல மிகவும் சிரமப்பட்டனர்; தாவரக் கொடிகளால் கட்டி இழுத்துச் சென்றனர். நாளடைவில் மரக்கட்டைகளை அடுத்தடுத்து வைத்து அடுக்கி அதன் மேல் பொருட்களை வைத்து உருட்டிச் சென்றனர். மேடுகளிலிருந்து உருளும் வடிவிலுள்ள பொருள்கள் எளிதாக தானே உருண்டு செல்வதைக் கண்டனர். உருளும் வடிவமைப்பின் தொடர் வளர்ச்சியே சக்கரத்தின் முதல் வடிவமானது. நாளடைவில் தேவைக்கேற்ப விதவிதமாகச் சக்கரங்கள் உருவாக்கப்பட்டன. சக்கரங்கள் நடுவில் துளையிடப்பட்டு ஓர் அச்சில் சுழன்றன. பின்னர் நாய், கழுதை, எருது, குதிரை, போன்ற விலங்குகளைப் பயன்படுத்தி வண்டிகளை இழுக்கச் செய்தனர்.



சக்கரம் புதிய கற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

சக்கரத்தின் கண்டுபிடிப்பு, பொருள்களை எளிதாகவும், வேகமாகவும் ஓரிடத்திலிருந்து பிற இடங்களுக்கு எடுத்துச்செல்லப் பயன்பட்டது. கண்டுபிடிப்புகள் அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தபோதிலும் இன்றைய நவீன உலகின் அறிவியல் வளர்ச்சிக்குப் பல்வேறு அறிவியல் அறிஞர்கள் பங்களிப்பை அளித்துள்ளனர். அவர்களில் சிலர் புகழ்பெற்ற கண்டுபிடிப்பாளர்கள். அவர்களின் கண்டுபிடிப்புகள் நம் வாழ்வின் முக்கிய அங்கங்களாக விளங்குகின்றன. அவர்களைப் பற்றி அறிவோமா?" என்றார் ஆசிரியர்.



| | | |
|---|---|---|
|  | விண்மீன்களின் வாழ்க்கைக் காலம் | எஸ். சந்திரசேகரன் |
|  | அணுசக்தி ஆராய்ச்சி | ஹோமி பாபா |
|  | ஏவுகணை தொழில்நுட்பம் | அப்துல் கலாம் |
|  | மரபணு ஆராய்ச்சி | வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் |

ஆசிரியர் கூறி முடித்ததும் "பெண் அறிவியல் அறிஞர்கள் யாரும் இல்லையா"? என்று கேட்டாள் திவ்யா.

"ஏன் இல்லை? தற்போது பயன்படுத்தப்படும் கணிப்பொறியைச் சார்லஸ் பாபேஜ் கண்டறிந்திருந்தாலும் அதற்கான மென்பொருளை( Programme ) எழுதியவர் அடா லவ்லேஸ் என்ற பெண்மணி ஆவார்."

| | |
|---|---|
| கணிப்பொறி மொழி( COBOL) | கிரேஸ்கோப்பர் |
| மை அழிப்பான் (WHITENER) | பெஸ்ஸி நெஸ்மித் |

"இந்தியாவில் பெண்விஞ்ஞானிகள் இல்லையா ?" என்றாள் மல்லி.

| | |
|---|---|
| டாக்டர் ஆஸிமா சேட்டர்ஜி | வலிப்பு நோய்க்கான மருந்து |
| ஜானகி அம்மாள் | தாவரவியல்துறை |

"அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனுக்கும், நாம் வாழும் பூமிக்கும் நன்மை அளிப்பதாக அமைய வேண்டும்," என்றார் ஆசிரியர்.

## தெரிந்து கொள்வோம்!

### சர். ஜெகதீஸ் சந்திர போஸ்

இந்தியாவின் மிகச் சிறந்த விஞ்ஞானி சர்.ஜெகதீஸ் சந்திர போஸ். இவர் தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்ற வியப்பூட்டும் உண்மையை உலகிற்கு வெளிப்படுத்திய இந்திய அறிவியல் மேதை ஆவார். இவர் கி.பி.1858ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் நாள் தற்போதைய வங்காள தேசத்திலுள்ள விக்ரபுரம் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தந்தையின் பெயர் பகவான் சந்திரபோஸ்; தாயின் பெயர் அபாலா போஸ்.



ஆரம்பக்கல்வியை உள்ளூரிலும், கொல்கத்தாவில் உயர்நிலை மற்றும் கல்லூரி படிப்பையும் முடித்தார். பின்னர், இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் கல்லூரியில் மேலும் ஓர் இளம் அறிவியல் பட்டம் பெற்றார். இவர் இயற்பியல், உயிரியல், தாவரவியல் மற்றும் தொல்லியல் துறைகளில் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

படிப்பை முடித்து நாடு திரும்பிய ஜெ.சி.போஸ் கொல்கத்தாவில் உள்ள மாநிலக்கல்லூரியில் சிறிது காலம் இயற்பியல் பேராசிரியராகப் பணியாற்றினார். பின்னர் அறிவியல் ஆய்வில் தனது கவனத்தைச் செலுத்தினார். ரேடியோ அலைகள் பற்றிய அவரது கண்டுபிடிப்பு வானொலி உருவாக அடிப்படையாக அமைந்தது. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற மேலை நாடுகளுக்குச் சென்று அறிவியல் துறையில் ஆய்வுக்கட்டுரைகள் பல வழங்கினார். இந்தியாவின் பெருமையை உலகறியச் செய்தார்.

போஸ் ஆராய்ச்சி நிறுவனம் எனும் அமைப்பைத் தொடங்கி அவர் தனக்குப் பிடித்த தாவரவியல் ஆய்வில் ஈடுபட்டார். இவருக்கு லண்டன், கொல்கத்தா பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தன. ஆங்கிலேய அரசு ‘சர்’ பட்டம் வழங்கி இவரைச் சிறப்பித்தது.

இவர் கி.பி.1937இல் நவம்பர் 23ஆம் நாளன்று இயற்கை எய்தினார். இவர், மாணவர்களுக்குக் கூறியது உண்மையான மாணவன் பணத்தையும் பதவியையும் தேடாமல் அறிவைத் தேடுவதிலேயே ஊக்கமாய் இருப்பான். என்பதாகும். எனவே நாம் காணும் ஒவ்வொரு பொருளையும் ஏன்? எதற்கு? என்று ஆராயத் தொடங்கினாலே நாமும் சிறந்த விஞ்ஞானிகள் ஆகலாம்.

## தெரிந்து கொள்வோம்

| கண்டுபிடிப்புகள் | கண்டுபிடித்தவர் |
|---|---|
| மின்விளக்கு, திரைப்படம் போன்றவை | தாமஸ் ஆல்வா எடிசன் |
| நீராவி இயந்திரம் | ஜேம்ஸ் வாட் |
| தொலைபேசி | அலெக்சாண்டர் கிரகாம் பெல் |
| வானொலி | மார்கோனி |
| தொலைக்காட்சி | ஜான் பெயர்டு |
| ஆகாய விமானம் | ரைட் சகோதரர்கள் |
| பென்சில் | என். ஜே. கண்டோ |
| ஜிப் | ஜே. ஜட்சன் |
| பல் துலக்கி (டூத் பிரஷ்) | வில்லியம் அட்டிஸ் |
| பாராசூட் | ஏ. ஜெ. கெமனின் |


## செயல்பாடு

1. நெருப்பைக் கண்டுபிடிக்காத காலத்தில் நீ வாழ்ந்திருந்தால், உன் அன்றாட வாழ்வு எவ்வாறு இருந்திருக்கும் ? உன் நண்பர்களுடன் கலந்துரையாடி, பட்டியலிடு.

2. ஆதிமனிதன் – இன்றைய மனிதன் வேறுபடுத்திக் காட்டுக.

| | உணவு | உடை | இருப்பிடம் |
|---|---|---|---|
| ஆதிமனிதன் | | | |
| இன்றைய மனிதன் | | | |

3. நம்அன்றாட வாழ்வில் சக்கரத்தின் பயன்களைப் பட்டியலிடுக.



## மதிப்பீடு

### I. கோடிட்ட இடங்களை நிரப்புக


1. நெருப்பை உண்டாக்க முதலில் அறிந்து கொண்டவன் ______________.

2. விவசாயம் ஒரு நாட்டின் ______________.

3.தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர் ____________.

4. ஜெ.சி.போஸ் ____________ என்ற அமைப்பைத் தொடங்கினார்.

### II. பொருத்துக



| | | |
|---|---|---|
| 1. ஏர் | – | ரைட் சகோதரர்கள் |
| 2. சிக்கி முக்கி கற்கள் | – | தாமஸ் ஆல்வா எடிசன் |
| 3. மின்விளக்கு | – | நெருப்பு |
| 4. ஆகாய விமானம் | – | விவசாயக் கருவி |



### III. வினாக்களுக்கு விடையளி

1. ஆதிமனிதன் எவ்வாறு நெருப்பை உருவாக்கினான் ?

2. ஏர் கண்டுபிடிப்பதற்கு முன் ஆதிமனிதன் நிலத்தை உழுவதற்குப் பயன்படுத்திய பொருள்கள் யாவை ?

3. சக்கரம் எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது ?

4. ஜெகதீஸ் சந்திர போஸ் மாணவர்களுக்குச் சொன்ன செய்தி என்ன ?

### IV. வகுப்பறைக்குள் வானவில்



**தேவையான பொருள்கள்:**

குறுந்தகடு (CD/ DVD), வெள்ளைத்தாள், டார்ச் விளக்கு,

**செய்முறை:**




வகுப்பறையை இருட்டாக்கிக் கொள்க, வகுப்பறையின் ஒரு சுவரில் வெள்ளைத்தாளினை ஒட்டு. குறுந்தகட்டின் எழுத்துக்கள் இல்லாத பக்கத்தில் டார்ச் விளக்கின் ஒளியைச் செலுத்தி அதன் ஒளி வெள்ளைத்தாளில் படும்படி செய். வெள்ளைத்தாளில் வானவில்லின் ஏழு வண்ணங்களைக் கண்டு களிப்போமா!



## திரும்பிப் பார்ப்போமா ?

படித்த ஐந்து பாடங்களில் நினைவில் உள்ளவற்றை எழுதுவோம்.



## ‘என்னால் முடியும், நான் செய்தேன்’

***( 'I can, I did' )***

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம் :

| வ. எண் | நாள் | பாட எண் | பாடத்தலைப்பு | செயல்பாடுகள் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |